ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2444/61 - 2025 ජූලි මස 11 වැනි සිකුරාදා - 2025.07.11

2444/61 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

இந்த QR குறியீட்டை Scan செய்து பதிவு விபரங்களைப் பார்வையிட முடியும். அல்லது ec.lk/vrd எமது இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

### தேருநர் இடாப்பு மீளாய்வு - 2025

### "அ", "ஆ" பட்டியல்களைக் காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல்

**வரைவிலக்கணம்**

*01. "சட்டம்"* - 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுச் செய்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்.

*02. செல்லுபடியாகும் தேருநர் இடாப்பு* - 2024 ஆம் ஆண்டின் பிரதான இடாப்பு மற்றும் 2024(1), 2024(2) மற்றும் 2024(3) ஆகிய குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் எனக் கருதப்படுகின்றது.

*03. " 'அ' பட்டியல்"* - செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளவர்களில் இறப்பெய்தியுள்ள அல்லது வதிவிடத்தை விட்டுச்சென்றுள்ள அல்லது வேறு காரணத்தின் அடிப்படையில் தகைமையீனத்திற்குட்பட்ட ஆட்களின் அதாவது, செல்லுபடியாகும் தேருநர் இடாப்பிலிருந்து நீக்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் உள்ளடங்கிய பட்டியல்.

*04. " 'ஆ' பட்டியல்"* - செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்படாத ஆனாலும் 18 வயது பூர்த்தியடைதல் அல்லது வசிப்பதற்கு வருகைதரல் அல்லது வேறு காரணத்தின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் புதிதாக பெயர்களை உள்ளடக்குவதற்கு தகைமையைப் பெற்றுக்கொள்ளும் நபர்களின் பெயர்கள் உள்ளடங்கிய பட்டியல்.

**செல்லுபடியாகும் இடாப்பு (அல்லது ஒரு பகுதி) மற்றும் "அ" பட்டியல் மற்றும் "ஆ" பட்டியல் காட்சிப்படுத்தப்படும் இடங்கள்**

| காட்சிப்படுத்தப்படும் இடம் | காட்சிப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பு மற்றும் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|
| 01. மாவட்ட செயலகங்கள்/தேர்தல்கள் | குறித்த தேர்தல் மாவட்டத்தின் (மாவட்டத்தின்) செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் மொத்தப் பிரதி மற்றும் அலுவலகங்கள் அதனோடு தொடர்பான "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள் |
| 02. ஒவ்வொரு பிரதேச செயலகம் | குறித்த பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேருநர் இடாப்பு பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனோடு தொடர்பான "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள். |
| 03. ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம் | குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேருநர் இடாப்பினது பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனோடு தொடர்பான "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள். |
| 04. ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம் | குறித்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேருநர் இடாப்பினது பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனுடன் தொடர்பான "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள். |

**அறிவுறுத்தல்கள்**

01. "அ" மற்றும் "ஆ" பட்டியல் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பட்டியல்கள் அல்லது அதன் பிரிவுகள் அலுவலக நேரத்தினுள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் பொதுமக்கள் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்காக அங்கு II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பதிவு அலுவலரால் 2025.07.11 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பதிவு செய்யும் அலுவலருக்காக அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது.

02. தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்பான தேருநர் இடாப்பில் தனது பெயர் அல்லது வேறு நபரொருவரின் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கு தகைமையைப் பெற்றுள்ள ஆனாலும் தனது பெயர் தேருநர் இடாப்பிலிருந்து மற்றும் "ஆ" பட்டியலில் உட்சேர்க்கப்பட்டுள்ள அல்லது எவரேனுமொருவர் தனது பெயர் பெயரை இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்கு அல்லது வைத்துக் கொள்வதற்கு அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப தான் அல்லது தனக்கு பதிலாக வேறொருவரால் உரிமைக் கோரிக்கையை முன்வைக்க முடியும். அவ்வாறு உரிமை கோருபவர்களால் அது பற்றி மேற்குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள "அ" மற்றும் "ஆ" படிவத்திற்கமைய இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் 2025 யூலை மாதம் 11 ஆம் திகதி பிரசுரிக்கப்படுவதுடன், அன்றைய திகதி முதல் 04 வாரங்களுக்குள் அதாவது 2025 ஒகத்து மாதம் 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலருக்கு (மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்) கிடைத்தல் வேண்டும்.

03. தேர்தல் மாவட்டத்துடன் தொடர்பான தேருநர் இடாப்பில் அல்லது "ஆ" பட்டியலில் தனது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள ஒருவருக்கு தனது பெயர் அல்லது அந்த இடாப்பில் அல்லது "ஆ" பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஒருவரின் பெயர் அந்த இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருத்தல் தொடர்பாக அல்லது வைத்துக் கொள்ளுதல் சம்பந்தமாக ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கு முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் "இ" படிவத்திற்கமைய இரு பிரதிகளில் தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படுதல் தொடர்பாக குறிப்பிடப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதி முதல் அதாவது 2025 யூலை மாதம் 11 ஆம் திகதி முதல் நான்கு வாரங்களுக்குள் அதாவது 2025 ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

04. உரிமைக் கோரிக்கையைக் கோரும் நபரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் தொடர்பாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகள், உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்ப் பட்டியலொன்றுடனான அறிவித்தலொன்றுடன் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், "ஈ" படிவத்திற்கமைய இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவு

அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2025, யூலை மாதம் 25 ஆம் திகதி மற்றும் 2025, ஓகத்து மாதம் 11 ஆம் திகதிகளில் பிரசித்தப்படுத்தப்படும்.

05. உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவையான "அ", "ஆ" படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குத் தேவையான "இ", "ஈ" படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் அல்லது பிரதேச செயலகங்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவன அலுவலகங்கள் அல்லது கிராம அலுவலர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
*2025, யூலை 11.*

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* *தேர்தல் மாவட்டம்* | *II ஆம் நிரல்* *2025 "அ" மற்றும் "ஆ" பட்டியலை தயாரித்த உதவிப் பதிவு அலுவலர்* | *I ஆம் நிரல்* *தேர்தல் மாவட்டம்* | *II ஆம் நிரல்* *2025 "அ" மற்றும் "ஆ" பட்டியலை தயாரித்த உதவிப் பதிவு அலுவலர்* |
|---|---|---|---|
| 01. கொழும்பு | பியுமி ஆட்டிகல | 12. மட்டக்களப்பு | எம். பி. எம். சுபியான் |
| 02. கம்பஹா | டப்ளியு. ஏ. ரவீந்திர விக்கிரமசிங்ஹ | 13. திகாமடுல்ல | கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க |
| 03. களுத்துறை | காலிந்திர ஜயவீர பெர்னாந்து | 14. திருகோணமலை | எஸ். கே. தேவநிரஞ்சன் |
| 04. கண்டி | எச். டீ. என். சம்பத் பெர்னாந்து | 15. குருநாகல் | ஆர். எம். எச். பி. ரத்னாயக்க |
| 05. மாத்தளை | எச். ஏ. ஈ. புஷ்பகுமார | 16. புத்தளம் | எஸ். எல். ஆர். ஜயநாயக்க |
| 06. நுவரெலியா | கே. ஏ. எல். எஸ். கலுகம்பிட்டிய | 17. அநுராதபுரம் | என். பீ. பீ. ஐ. ஆர். குணரத்ன |
| 07. காலி | டப்ளிவ். எச். ஆர். விஜய குமார | 18. பொலன்னறுவை | மனோஜி ரீ. குருசிங்க |
| 08. மாத்தறை | பீ. எஸ். பத்திரண | 19. பதுளை | கே. காந்தீபன் |
| 09. அம்பாந்தோட்டை | வீ. டீ. ஜே. லக்மால் | 20. மொணராகலை | என். ரேகன் |
| 10. யாழ்ப்பாணம் | ஆர். சசீலன் | 21. இரத்தினபுரி | சுரங்க அம்பகஹதென்னெ |
| 11. வன்னி | ஆர். சீ. அமல்ராஜ் | 22. கேகாலை | சஜித் பீ. கஸ்துரிசிங்க |

EOG 07-0131

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.